தேதி.19.11.2024

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

**O.S.No**. 46/2014 திரு.**R**. சுப்பிரமணியம் பி.வா.சா. 5

<u>பி.வா.சா.5: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு ஆதார் கார்டு கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கொண்டப்பநாயக்கன்பாளையம் . வாதி, பிரதிவாதிகளை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு 18 வயது இருக்கும் போதிருந்தே தெரியும். தாவா சொத்தின் பழைய சர்வே. புதிய சர்வே தெரியும் என்றால் 56 என்று தெரியும். அது பழைய எண்ணா, புதிய எண்ணா என்ன என்று எனக்கு தெரியாது. என்னுடைய காளையில் சர்வே எண் தெரியுமா என்றால் 90B1. தாவா சொத்தின் நான்கு பக்க எல்லைகள் தெரியுமா என்றால் மேற்கே தார் ரோடு, வடக்கு புறம் அதே காலையில் பழனிச்சாமியின் சொத்து உள்ளது. தெற்கே மெட்ராஸ் ஐயர் சொத்து, கிழக்கே என்னுடைய மாமனார் பெரிச்சின கவுண்டர் சொத்து. தாவா சொத்து எத்தனை ஏக்கர் என்றால் 2 ஏக்கர் என்று சொல்வார்கள்.

இந்த பிரதிவாதி தான் இந்த தாவா சொத்தில் சுவாதீனத்தில் ஓட்டி வருகிறார் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். எனக்கு 18 வயதிலிருந்து ஓட்டி வருகிறார். என்னுடைய பூமியின் செக்குபந்தி தெரியுமா என்றால் எனக்கு தெரியும். என் பூமிக்கு வடபுறம் மெயின் ரோடு, தெற்கு நடராஜ் பூமி, கிழக்கு சுப்பிரமணி தங்கவேல் பூமி, மேற்கு மணி, பழனிச்சாமி பூமி. தற்போது தாவா சொத்தில் என்ன வெள்ளாமை செய்துள்ளார்கள் என்றால் வாழை மற்றும் மல்லிகை. வழக்கினை யார் யார் மீது போட்டுள்ளார்கள் என்றால் பிரதிவாதி அவர் மீது வழக்கு போட்டுள்ளதாலும், சாட்சியம் அளிக்கும் படி அழைத்தார். என்னை சாட்சியம் அளிக்க நேரில் யார் கூட்டி வந்தார்கள் என்றால் பிரதிவாதி என்னை கூட்டி வந்தார். பிரதிவாதி சார்பாக வேறு யாரும் வந்து என்னை கூப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வடக்கு பேட்டையில் குடியிருந்து வருகிறார் என்றும், மாட்டு வண்டி வைத்து சந்தைக்கு வாடகைக்கு பொருட்களை ஏற்றி செல்லும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் தோட்டத்தில் குடியிருந்து வரவில்லை வடக்கு பேட்டையில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தோட்டத்தில் யார் யார் குடியிருந்து

வருகிறார்கள் என்றால் பிரதிவாதி, அவர் மனைவி மகள் குடியிருந்து வருகிறார்கள். எத்தனை வருடங்களாக அவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனது 18 வயதிலிருந்து குடியிருந்து வருகிறார்கள். பிரதிவாதி அங்கு குடியிருக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.